## சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் ரூ.1 கோடி தேர்தல் நிதி!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் வழங்கினார்!



சென்னை, ஜூலை 7-

கழக இளைஞர் அணிச் செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்று, ஏழாவது ஆண்டில் அடி எடுத்த வைத்த நாளில் (04/07/2025) சென்னை வடக்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள், கலைஞர் நூலகங்களைத் திறந்து வைத்தல் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களின் மணி விழாவின்போது, 1970-ஆம் ஆண்டு, தமிழ்நாடு முழுவதும் 60 சிலைகளை முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்தார். அதில், சென்னை ராயபுரத்தில் அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் சிலை தற்போது புதுப்பிக்கப்பட்டு, அருகிலேயே முத்தமிழறிஞர் கலைஞருக்கும் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

இரு தலைவர்களின் திருவுருவச் சிலையை இளைஞர் அணிச் செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வின்போது, சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், கழகத்திற்கு தேர்தல் நிதியாக ரூ.1 கோடி வழங்கினார். தேர்தல் நிதியைப் பெற்றுக் கொண்ட கழக இளைஞர் அணிச் செயலாளர், "மாநிலத்திலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் தேர்தல் நிதி வழங்கி, மற்ற மாவட்டக் கழகங்களுக்கு எல்லாம் முன்னுதாரணமாக சென்னை வடக்கு மாவட்டக் கழகம் திகழ்கிறது" எனப் பாராட்டினார்.

அதனைத்தொடர்ந்து, பெரம்பூர், ராயபுரம் , ஆர்.கே நகர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகங்களை திறந்துவைத்தார்.

அதேபோல, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜெ.எபினேசர் ஏற்பாட்டில், அமைக்கப்பட்ட தையல் பயிற்சி, கணினிப் பயிற்சி மையம், கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக, ஆர்.கே. நகரில் அமைக்கப்பட்ட கேரம் விளையாட்டுப் பயிற்சி மையத்தையும் திறந்துவைத்து சிறப்பித்தார்.



திருச்சி மாவட்டம் லால்குடி அருகே விரகாலூரில் நடைபெற்ற ஸ்டேன்ஸ் சுவாமி சிலை திறப்பு விழா, மற்றும் சனநாயக எழுச்சி மாநாட்டினை பள்ளி கல்விக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.தொடர்ந்து ஸ்டேன் சுவாமி சிலையை கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி மற்றும் சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் ஆகியோர் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் முத்தரசன், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம், தவத்திரு திருடிக்குடில் சுவாமிகள், திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி, கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க தலைவர், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், லால்குடி சட்டமன்ற உறுப்பினர் சௌந்தரபாண்டியன், காங்கிரஸ் கட்சி திருச்சி வேலுச்சாமி, திருச்சி மத்திய மாவட்டக் கழக செயலாளர் வைரமணி,இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநில பொதுச் செயலாளர் முஹமது அபூபக்கர் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வருகிற 15 ஆம் தேதி

# "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் : சிதம்பரத்தில் முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

## நவம்பர் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்!

சென்னை, ஜூலை 7-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முதல் முகாமினை, வரும் 15.07.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார். இந்தத் திட்டம் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் நகர்புறப் பகுதிகளில் 3,768 முகாம்களும் ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்களும் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள். இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள்/சேவை களை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப்பத்தினையும் வழங்குவர்.

மேலும் இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் குறித்த விபரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக, "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி. 07.07.2025 முதல் தொடங்க உள்ளது. இந்தப் பணி மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். இப்பணிக்காக சுமார் 1 லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் உங்கள் பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் கே.என்.நேரு - மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. முன்னிலை

# நெல்லையில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்!

## தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அமைச்சர் கோவி.செழியன் பணி நியமன ஆணை - பேட்டி !

நெல்லை, ஜூலை 7-

நெல்லை மாவட்டம் வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தனியார் வேலை வாய்ப்பு முகாமில் 5300 வேலை நாடுனர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிவிட்டு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.ஆகியோர் முன்னிலையில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் செய்தியாளர்களிடம் புதிய பாடப்பிரிவு முதலமைச்சர் அவர்கள் காட்டும் உற்சாகம் நான் முதல்வன் திட்டம்,தமிழ் புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் 7.5 சதவீத இட ஒதுக்கீடு ஆகியவற்றின் காரணமாக உயர் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளது. என்று பேட்டியின் போது தெரிவித்தார்.

நெல்லையில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

உயர்கல்வி படிப்புகளில் புதிய பாடத்திட்டம் கொண்டு வருவதற்கு குழு அமைக்கப்பட்டுள்ளது, தற்சமயம் பொறியியல் படிப்பில் ஏழு புதிய பாடத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது.64 கல்லூரிகளில் ஷிப்ட் 2 முறை தொடங்கப்பட்டிருக் கிறது.கடந்த 4 மாதத்தில்15 புதிய கலை அறிவியல் கல்லூரி தொடங்கப் பட்டுள்ளது.மொத்தம் 180 கல்லூரிகள் உள்ளது.முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் தமிழகத்தில் உயர் கல்வித்துறை இமாலய சாதனை படைத்துள்ளது. பொறியியல் படிப்பு சேர இதுவரை 3 லட்சம் விண்ணப்பங்கள் வந்துள்ளது.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 15 சதவீதம் கூடுதலாக மாணவர்கள் சேர்வார்கள்,புதிய பாடப்பிரிவு முதல்வர் அவர்கள் காட்டும் உற்சாகம் நான் முதல்வன் திட்டம்,தமிழ் புதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம் 7.5 சதவீத இட ஒதுக்கீடு ஆகியவற்றின் காரணமாக உயர் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளது. தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு 2000 கௌரவ விரைவுரையாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளது. இன்னும் 10 தினங்களுக்குள்ளாக1300 பேருக்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டு முதல் கட்டம் 400 அதைத் தொடர்ந்து 500 என்ற அளவில் கௌரவ விரைவுரையாளர்கள் பணிக்கு தேர்வு செய்யப் படுவார்கள்.

நிரந்தர ஆசிரியர் பணியிடங் களுக்கு 4000 பேர் தேர்வு செய்ய தேர்வு நடத்த ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதம் நடத்த திட்ட மிட்டது. நீதிமன்ற தடை உத்தரவு ஏற்பட்டிருப்பதால் அதை விரைவில் சரி செய்து நிரந்தர கல்லூரி ஆசிரியர் பணியிடம் நிரப்பப்பபடும்.

இவ்வாறு அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தெரிவித்தார்.

அதன் பின்னர் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது.

தி.மு.க.ஆட்சியை அகற்றுவேன் என்று எடப்பாடி பழனிச்சாமி கூறி வருகிறார் என்ற கேள்விக்கு பதில் அளித்த அவர் ஒவ்வொரு கட்சிக்கும் பேசுவதற்கு உரிமை உண்டு.பல கட்சியினரும் ஆட்சிக்கு வருவேன் என்று கூறுவார்கள் ஆனால் தி.மு.க கூட்டணி தான் வலுவாக இருக்கிறது.

எடப்பாடி பழனிச்சாமி 7ம் தேதி சுற்றுப்பயணம் தொடர்கிறார். அதற்குள் எங்கள் கழக தலைவர் தளபதி ஏற்கனவே தொடங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் மீண்டும் முதலமைச்சராக வருவார்கள்.

அதற்கான அனைத்து பணிகளும் நடைபெற்று வருகிறது. நெல்லையப்பர் கோவில் தேர்திருவிழாவை முன்னிட்டு நெல்லையப்பர் கோவிலை சுற்றி பல்வேறு பணிகள் ஆய்வு செய்யப் பட்டு உள்ளது.விரைவில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும், திருச்செந்தூரில் கடல் அருகில் அமைக்கப்பட்டுள்ள மரப்பாலம் அருகே கழிவு நீர் வருவதாக கூறப்படுகிறது. அங்கு கழிவு நீர் சுத்திகரிப்பு மையம் அமைக்கப் படும், மேலும் நெல்லை பேருந்து நிலையம்,சரக்கு முனையத்தில் உள்ள கடைகளுக்கு சதுர அடிக்கு 60 ரூபாய் நிர்ணையிக்கப்பட்டு 8 டெண்டர்கள் விடப் பட்டு யாரும் வரவில்லை, எனவே தொகையை குறைத்து 30 ரூபாய்க்கு வழங்க அறிவுருத்தப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை மார்க்கெட்டை பொறுத்த வரை கடைகளை வழங்குவது தொடர்பாக நீதிமன்றம் என்ன சொல்கிறதோ அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். நிதிநிலையை கருத்தில் கொண்டு அரசு துறையில் காலிப்பணியிடங்கள் நிறப்பப்பட்டு வருகிறது. சத்துணவு பணியாளர்கள்,கிராம உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.2536 பொறி யாளர்கள் நியமிக்கப்பட்டு டுள்ளனர். இதுதவிர டி.என்.பி.எஸ்.சி. மூலமும் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது.

தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் தி.மு.க.வோடு எப்போதும் கூட்டணி இல்லை என்று சொல்லி இருக்கிறார் என்ற கேள்விக்கு..... அவரை நாங்கள் கூப்பிடவே இல்லையே என்று பதில் அளித்தார்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அப்போது கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## தேவர்குளம் 'முரசொலி' முகவர்

# கே.பிச்சையாபிள்ளை இல்லத் திருமண விழா!

## கழகத்தினர் வாழ்த்துகின்றனர்!

திருநெல்வேலி, ஜூலை 7-

சேரன் மகாதேவி ஏ.சங்கரலிங்கம் - எஸ்.கோமதி ஆகியோரின் புதல்வர் எஸ்.அகஸ்தியனுக்கும், தேவர்குளம் முரசொலி முகவர் கே.பிச்சையாபிள்ளை - பி.கோமதி அம்மாள் ஆகியோரின் புதல்வி பி.கனகலட்சுமி (எ) சாரதாவுக்கும், மணவிழா இன்று (7.7.2025 - திங்கள்கிழமை) காலை 9 மணியளவில் சேரன்மகாதேவி ஒப்பிலா நாயகி அம்பாள் உடனுறை ஸ்ரீ வைத்திய நாத சுவாமி திருக்கோவிலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு இன்று (7.7.2025) காலை 10 மணியளவில் பத்தமடை எஸ்.கே.பி.திருமண மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழகத்தினர் மற்றும் ஆன்றோர் - சான்றோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.





தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு சரணாலய புல்வெளி கரும்புலி பகுதியில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் ஆய்வு மேற்கொண்டார். உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி. சண்முகையா, துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் தொகுதியில் கழக மண்டல பொறுப்பாளர், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் இல்லந்தோறும் சென்று ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளை துவக்கி வைத்து கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க புத்தகத்தை பொதுமக்களிடம் வழங்கினர். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.